ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

බැංකු නොවන මූල්‍ය ආයතන අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
DEPARTMENT OF SUPERVISION OF NON-BANK FINANCIAL INSTITUTIONS

අංක 30, ජනාධිපති මාවත, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01, இலங்கை
No. 30, Janadhipathi Mawatha, Colombo 01, Sri Lanka

தொடர்பு எண்: 24/10/001/0019/005

2023 சனவரி 31

முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்

**பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தல் அல்லது இலாபங்களை மீளஅனுப்புதல் மீதான வழிகாட்டல்**

2023.02.01 அன்று நடைமுறைக்கு வரும்விதத்தில் அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் ஏற்புடைய பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தல் அல்லது இலாபங்களை மீளஅனுப்புதல் மீதான வழிகாட்டலை நாம் இத்துடன் இணைத்துள்ளோம்.

இணைக்கப்பட்டுள்ள இவ்வழிகாட்டலை அனைத்து தொடர்பான அலுவலர்களுக்கும் தொடர்பூட்டுமாறும் அத்துடன் இவ்வழிகாட்டலில் குறித்துரைக்கப்பட்டவாறான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுமாறும் இத்தால் கோரப்படுகின்றீர்கள்.

இப்படிக்கு உண்மையுள்ள,

**(திருமதி) ஆர் எம் சி எச் கே ஜயசிங்க**
பணிப்பாளர்

இணைப்பு : பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தல் அல்லது இலாபங்களை மீளஅனுப்புதல் மீதான வழிகாட்டல்

☎ 011-2477500 🖷 011-2477738/697 ✉ dsnbfi@cbsl.lk 🌐 www.cbsl.gov.lk

**பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தல் அல்லது இலாபங்களை மீளஅனுப்புதல் மீதான வழிகாட்டல்**

**1. வழிகாட்டல்களின் குறிக்கோள்கள்**

1.1. பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தல் அல்லது இலாபங்களை மீளஅனுப்புதல் என்பவற்றை தீர்மானிக்குகையில், பங்குதாரர்களுக்கான வருவாய் மற்றும் நட்டங்களை ஈர்த்துக்கொள்வதற்காகவும் எதிர்கால வியாபார வளர்ச்சிக்காகவும் பிடித்துவைக்கப்பட்ட நிதியங்கள் ஆகியவற்றுக்கிடையில் சமநிலையொன்றை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பேணுதல் வேண்டும். போதியளவு மூலதனத்தை பேணுவதன் மூலம் நிச்சயமற்ற நேரத்தில் எழக்கூடிய பொருளதார அதிர்ச்சிகளை ஈர்த்துக்கொள்வதற்கும் வாடிக்கையாளர்களின் கொடுகடன் தேவைகளுக்கு தொடர்ச்சியாக ஆதரவளிப்பதற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தாக்குபிடிக்குந்தன்மையையும் இயலாற்றலையும் வலுப்படுத்துவதற்கான வழிமுறையொன்றாக இவ்வழிகாட்டல் விடுக்கப்படுகின்றது.

**2. ஏற்புடைமை**

2.1. 2022.04.01 அன்று அல்லது அதன்பின்னர் ஆரம்பமாகின்ற நிதியியல் ஆண்டுகளுக்கான அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் இவ்வழிகாட்டல் ஏற்புடையதாக்கபடும்.

**3. முன் ஒப்புதல்**

3.1. இடைக்கால/இறுதி பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தல் அல்லது இலாபங்களை மீளஅனுப்புதல் மீதான பிரகடனத்திற்கு முன்னர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலை பெறுதல் வேண்டும்.

3.2. பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தல் அல்லது இலாபங்களை மீளஅனுப்புதல் மீதான பிரகடனத்திற்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு கோரிக்கையை விடுக்கும் நேரத்தில் இவ்வழிகாட்டலின் 04ஆம் பிரிவில் எடுத்துரைக்கப்பட்டவாறு குறைந்தபட்ச பிரமாணத்தை/நிபந்தனைகளை எதிர்கொள்ளுமாறு உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் கோரப்படுகின்றன. இத்தகைய குறைந்தபட்ச பிரமாணம்/நிபந்தனைகள் என்பவற்றையும் இதற்கு மேலதிகமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் மற்றும்/அல்லது ஒட்டுமொத்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் நிதியியல் நிலைமையை பாதிக்கின்ற வேறு ஏதேனும் குறித்த காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையொன்றில் கோரிக்கைகளை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் மதிப்பீடு செய்வார்.

**4. நிறைவுசெய்யப்பட வேண்டிய குறைந்தபட்ச பிரமாணம்/நிபந்தனைகள்**

4.1. முன்மொழியப்பட்ட பங்கிலாப கொடுப்பனவுகளுக்காக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பின்வருவனவற்றை கோருகின்றன :

அ) முன்மொழியப்பட்ட பங்கிலாப பிரகடனங்கள் அதன் பணிப்பாளர் சபை மூலம் ஒப்புதலளிக்கப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பங்கிலாபக் கொள்கையுடன் இணங்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல்.

ஆ) முன்மொழியப்பட்ட பங்கிலாபங்களின் அறிவித்தலுக்கு முன்னர் முந்தைய பஞ்சாங்க மாதத்திற்காக கொண்டு நடாத்தப்படும் பின்வருகின்ற கணிப்புதல்களை சமர்ப்பித்தல் வேண்டும்:

i. 2013ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவத்தன்மை சொத்துக்கள்) பணிப்புரையில் அல்லது திருத்தபட்டவாறானவற்றில் எடுத்துரைக்கப்பட்ட முன்மதி விகிதங்கள். முன்மொழியப்பட்ட பங்கிலாபங்களை திருத்திய பின்னர் இப்பணிப்புரையின் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுடன் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் இணங்குதல் வேண்டும்.

ii. மூலதன போதுமாந்தன்மை தேவைப்பாடுகள் மீதான 2018ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதித் தொழில் சட்டப் பணிப்புரையில் அல்லது திருத்தபட்டவாறானவற்றில் எடுத்துரைக்கப்பட்ட முன்மதி விகிதங்கள். முன்மொழியப்பட்ட பங்கிலாபங்களை திருத்திய பின்னர் இப்பணிப்புரையின் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுடன் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் இணங்குதல் வேண்டும்.

iii. குறைந்தபட்ச மைய மூலதனம் மீதான 2017ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதித் தொழில் சட்டப் பணிப்புரையில் அல்லது திருத்தபட்டவாறானவற்றில் எடுத்துரைக்கப்பட்ட மைய மூலதனம். முன்மொழியப்பட்ட பங்கிலாபங்களை திருத்திய பின்னர் இப்பணிப்புரையின் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுடன் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் இணங்குதல் வேண்டும்.

இ) பேரண்ட பொருளாதார நிலைமைகளின் இயலாற்றலுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வெளிப்படுத்துகின்றதும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான வியாபாரத் திட்டங்களை எறிவு செய்கின்றதுமான பொருண்மைய தாக்கங்களை (தவணை தவறுதல் இடர்நேர்வு, கொடுகடன் திரட்சி இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பவற்றை அதிகரிப்பதற்கு வழிவகுக்கின்ற சூழ்நிலைகள்/ நிகழ்வுகள் என்பவற்றின் பார்வையில்) கருத்திற்கொண்டு திரவத்தன்மை, வருவாய்கள் மற்றும் மூலதன போதுமாந்தன்மை என்பவை மீதான அழுத்தச் சோதனைகளை செயலாற்றுவதுடன் அவற்றின் பெறுபேறுகளை ஆதரவான அனுமானங்களுடனும் செய்கைகளுடனும் சமர்ப்பித்தல் வேண்டும். முன்மொழியப்பட்ட பங்கிலாபங்களுக்காக திருத்தியமைத்ததன் பின்னர் அழுத்தச் சோதனை விளைவுகள் 4.1.ஆ இல் எடுத்துரைக்கப்பட்டவாறு குறைந்தபட்ச தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தல் வேண்டும்.

ஈ) 4.1.அ. தொடக்கம் இ. வரையில் எடுத்துரைக்கப்பட்ட இணக்கங்களும் கணிப்புதல்களும் தொடர்பான உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபையாலும் சபை கணக்காய்வுக் குழுவாலும் ஒப்புதலளிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல்.

உ) வெளியக கணக்காய்வாளர்களிடமிருந்து பெறப்பட்ட தொடர்பான உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் கடன் தீராற்றல் கூற்றலொன்றைச் சமர்ப்பித்தல்.

**5. முன்னைய வழிகாட்டலை இரத்துச்செய்தல்**

5.1. "இதனகத்துப் பின்னர் வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள் என அறியப்படுகின்ற உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மூலமும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மூலமும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 32, 39 ஆகியவற்றையும் இலங்கை நிதியியல் அறிக்கையிடுதல் நியமங்கள் 07இனையும் பின்பற்றுதல்" மீதான 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டலானது இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.